
காஞ்சி

# நாடு



## என்றுமே நிம்மதி இல்லை!

சட்டங்கள் பல போட்டாலும் சாதிகள் மாறவில்லை,
சமுதாயம் ஏற்றதாழ்வை மாற்றவில்லை,
உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பிரிவினை
போகவில்லை
இதனை எத்தனைமுறை சொன்னாலும் யாருமே
கேட்பதில்லை.
மதவாதம் ஓயவில்லை;-மக்களுக்கு மனமாற்றம் இல்லவே
இல்லை,
இதனால் அனுதினமும் தொல்லை
இந்தநிலை தொடர்ந்தால்
என்றுமே நிம்மதி இல்லை.

வின்சென்ட் இரா இராசேந்திரன்
கோட்டை, அறந்தாங்கி.

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

JL
m2H, N92kN
N93.1.13
217212
2376
PCL-TNAL 03376

# அண்ணா பற்றாளர்களுக்கு வேண்டுகோள்.

## பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் தொகுப்பு - திட்டம்

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், தம்பிக்கு கடிதங்கள், மிகச் சிறந்த முறையில் என்றென்றும் போற்றி பாதுகாக்கின்ற வகையில் 100 பக்கங்களுககு குறையாமல் நல்ல தரமான தாளில், வண்ண அட்டையுடன் வெளிவர இருக்கிறது, முதல் தொகுப்பு வருகிற அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ல் வெளிவருகிறது, தொகுப்பின் விலை ரூ. 150/- பதினைந்து தொகுப்புகள் வர இருக்கின்றன. ஒரு திங்களுக்கு ஒரு தொகுப்பு என்கிற வகையில்! ரூ. 150/- முன்பணம் அனுப்பி பதிவுசெய்து கொள்ளவும். 1000 புத்தகங்கள் மட்டும் வெளியிட திட்டமிட்டுள்ளோம். ஆகையால் விரைவில் உங்கள் பெயரை பதிவுசெய்து கொள்ளவும். வருகிற ஆகஸ்ட் பதினைந்தாம் தேதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பின்குறிப்பு: காசோலை, பணவிடை அனுப்பவேண்டிய முகவரி,

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை,
7, அவின்யூ சாலை,
சென்னை - 600 034,
தமிழ்நாடு,
தென் இந்தியா

---

**காஞ்சி நாடு**

**விளம்பர கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு நன்கொடை | ரூ | 25/- |
| வாணாள் நன்கொடை | ரூ | 250/ |
| புரவலர் நன்கொடை | ரூ | 1000/- |

**விளம்பரக் கொடை**

| | | |
|---|---|---|
| கடைசி அட்டை | ரூ | 1000/- |
| உள் அட்டை | ரூ | 750/- |

# காஞ்சி நாடு

மலர்—1 7—8—1993 இதழ்—13

திருவள்ளுவர் ஆண்டு 2024 கடகம் (ஆடி)


புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# பணிவார்ந்த வேண்டுகோள்

பேரவையின் நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். நமது காஞ்சி நாடு இதழ் வளர உறுப்பினர்களைச் சேர்த்துத் தரும் அனைவருக்கும் எம் நன்றி. குறிப்பாக திரு.மு வயலூர்க்குமரன், (திருநெல்வேலி) (திருப்பத்தூர்) கீ வீரமணி, திரு. பெரியய்யா (மதுரை) திரு. பிரகாஷ் (காரியாம்பட்டி) திரு. துரை (கவுந்தபாடி) மற்றும் பல நண்பர்களுக்கு எங்கள் நன்றி. இதழ் விற்பனையில் பெரும் உதவி பெரும் நெய்வேலி நண்பர்களுக்கும் எங்கள் நன்றி. மற்றும் பல வகையில் இதழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் எங்கள் நன்றி. மற்றுமோர் மசிழ்ச்சியான செய்தி தமிழக நூலகங்களுக்கு நமது இதழ் விரைவில் செல்ல இருக்கிறது மேலும். மேலும் உறுப்பினர்களைச் சேர்த்துத் தரவேண்டும் என்பது எங்கள் பணிவார்ந்த வேண்டுகோள். விளம்பரங்களும் பெற்றுத்தந்து உதவுங்கள். வருகிற அண்ணா பிறந்தநாளில் இருந்து இதழ் புதிய பொலிவுடன் வெளிவர இருக்கிறது. உங்கள் துணையுடன்! அண்ணாவின் தொகுப்பு நூல்கள் திட்டத்திற்கும் நீங்கள் உறுதுணையாக இருந்து முன்பணம் பெற்றுத் தரவேணடும். பல நண்பர்களுக்கு இரசீது புத்தகங்களும், அறிக்கைகளும், அனுப்பப் பட்டுள்ளன. மற்றவர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும். பேரவையின் அச்சாணிகளே துரிதமாக செயல்படுங்கள்!

அண்ணாவின் கொள்கைகளை எட்டு திக்கும் எடுத்து சென்று சேர்ப்போம்!!

# திரட்டு

கோவை திராவிட இயக்கத்தவரும், பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் வாழ்நாள் உறுப்பினருமான கோவை கி. வெற்றிவேலு அவர்கள். அறிஞர் அண்ணா பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவி கடந்த இருபது ஆண்டுகளாக ஏழிமாணவர் கல்வி நிதி உதவி அமைப்பாக நடத்தி வருகிறார். தற்போது அண்ணா அறக்கட்டளை விரிவாக்க திட்டத்தின் கீழ் கோவை பெரியார் மாவட்டத்தில் 19 3ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெற்ற மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ/மாணவியருக்கு பெரிய குயிலை குருசாமி கிருட்டிணசாமி விருது ரூ. 2000/- சுப்புலட்சுமி அம்மாள், கிருட்டிணசாமி விருது ரூ 2000/- என வழங்கப்பட உள்ளது.

அண்ணா அறக்கட்டளை சார்பில் கோவை பெரியார் மாவட்ட பள்ளி மாணவர்களுக்கு 'அறிஞர் அண்ணா காலத்தில் மாணவர் எழுச்சி' எனும் ஓர் கட்டுரைப் போட்டி கோவை, பெரியார் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மேல்நிலை வகுப்பு, மாணவ மாணவியர்களுக்காக நடத்துகிறார். அண்ணா அறக்கட்டளையின் நிறுவனர் இரா கந்தசாமி அவர்கள் நினைவாக முதற்பரிசு ரூ. 1200- இரண்டாம் பரிசு ரூ 800/- மூன்றாம் பரிசு ரூ 500/- வழங்கப்படும் என அறிவித்துள்ளார். கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 17—8—93 பரிசு அறிவிக்கும் நாள் 15–9—93 என்றும் அறிவித்திருக்கிறார் கட்டுரையை அனுப்ப வேண்டிய முகவரி அண்ணா அறக்கட்டளை, தமிழ் குடில் சுந்தராபுரம் கோவை-24.

## 'திருக்குறள் நயம்' நூல் வெளியீடு

தமிழ்ச்சுடர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களை நிறுவனராகக் கொண்ட, பல்கலைப் புலவர். தமிழ்க் 'கா. சு' நினைவு இலக்கிய குழு 24—7—93 சனிக்கிழமை மாலை 6-30 மணியளவில் குழித்தலையில் பல்கலைப் புலவர் தமிழ் 'கா. சு' நூலக அழகு மண்டபத்தில் நூல் வெளியீடு நிகழ்ச்சியை நடத்தியது.



217212
சென்னை-600 008

திருமலி. இராமு. இளங்குமரனார் அவர்கள் தலைமையில் ஆசிரியர் குறளன்பர், திருமலி ஆ.வே. இராமசாமி அவர்கள் எழுதிய 'திருக்குறள் நயம்' எனும் நூல் வெளியிடப்பட்டது அதை தொடர்ந்து வெண்பா, கட்டுரை, உரை இவைகளில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. திருமலி இராம கோவிந்தன், திருமலி து.வெள்ளமுத்து திருமலி. கடவூர் மணிமாறன் ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்.

## பதினாறு கவனக நிகழ்ச்சி

24—7—93 சனிக்கிழமை காலை 10மணி அளவில் உத்திரமேரூர் தமிழ் இலக்கிய மன்றம, பி.டி.என், திருமண மாளிகையில் கவியரங்கம் நினைவாற்றல் கலை நிகழ்ச்சி ஆகியவற்றை நடத்தியது.

முதல் நிகழ்ச்சியாக காலை 10 மணி அளவில் ஓர் கவியரங்கம் நடைபெற்றது. திரு. க. அரங்கநாதன் அவர்களின் வரவேற்புரைக்குப் பிறகு, திரு. எஸ். சம்பத்ராஜ் ஜெயின் அவர்கள் முன்னிலையில் கவியரங்கம் நடந்தது.

சமூக நோய்களைச் சரிப்படுத்துவோம் என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில் சாதிப்புற்றுநோய் என்ற தலைப்பில் கவிஞர் மு. ஏழுமலை, மதபேதத் தொற்று நோய் என்ற தலைப்பில் கவிஞர் நா. வீரமணி, வரதட்சிணை தொழுநோய் என்ற தலைப்பில் கவிஞர் மருதம் இளந்தமிழன் திரைமோக மூளைக்காய்ச்சல் என்ற தலைப்பில் கவிஞர் வ. செயபாஸ்கரன், மூடநம்பிக்கை மூளை காய்ச்சல் என்ற தலைப்பில் கவிஞர் முத்து, துரைராசன், வேலையின்மை வயிற்று வலி என்ற தலைப்பில கவிஞர். ஆ. கிருட்டிணன் நச்சிலக்கிய மஞ்சள் காமாலை என்ற தலைப்பில் கவிஞர் வேடந்தாங்கல் சுகுணன் ஆகியோர் கவிபாடினர். திரு. இரா, பாலகிருட்டிண்ன் அவர்கள் நன்றி கூற காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

மாலை நிகழச்சியாக பதினாறு கவனக நிகழ்ச்சி சுமார் 4 மணிக்குத் தொடங்கியது. திரு பர்சன்ராஜ் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் தலைவர் டாக்டர் சி,என்.ஏ. பரிமளம் தலைமை ஏற்றார். திரு இலக்கிய வீதி இனியவன் கவனகர் அறிமுகம் செய்தார். சோடச, அவதானி இரா. கனகசுப்புரத்தினம் அவர்கள் பதினாறு கவனக நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக நிகழ்த்தினார்.



JL NAS.1.13

# உலக தையற் கலைஞன் 11-ம் ஆண்டு விழா

25—7—93 அன்று திருவள்ளூர் ஆர். மிஸ்ரிலால் திருமண மண்டபத்தில் உலக தையற் கலைஞன் ஏட்டின் 11-வது ஆண்டு விழா நடைபெற்றது. காலை 10 மணி அளவில் நாடு முழுவதும் இருந்து வந்திருந்த தையற்கலைஞர்கள் ஓர் எழுச்சி மிகு ஊர்வலத்தை நடத்தினர். அதை தொடர்ந்து ஓர் பட்டிமன்றமும், அதற்குபிறகு வாழ்த்தரங்கமும் நடைபெற்றது. டாக்டர். பேராசிரியர் இரா. சேது, பேராசிரியர் K.S மூர்த்தி, திரு. தாமோதரன், தையற்கலைஞர் சங்கத் தலைவர் திரு. G N ராவ், காஞ்சி திரு R.S. மணி, திரு. P.M குமார் திரு. P. ஆறுமுகம், திரு, S. R. வரதராசன் திரு. V.G விசயகுமார், திரு. T.C. இராமசாமி, திரு. இரா. மோகன்தாஸ், திரு. வேதை, இரா. முருகைய்யன், திருமதி. லைலாதாசுதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் தொழிற் கருவிகளையும், சான்றிதழையும் வழங்கி டாக்டர். சி.என் ஏ. பரிமளம் சிறப்புரையாற்றினார். உலகத்தையற் கலைஞன் ஆசிரியர் திரு TV.S. மணி ஏற்புரை நிகழ்த்தினார் உலகத் தையற்கலைஞன் வாசகர் வட்டம், திருவள்ளூர் விழா அமைப்புகளை செய்திருந்தது.

# மண்வாசனை 'பண்' பாட்டு விழா

25—7—93 அன்று மாலை 6-30 மணி அளவில் செங்கற்பட்டு டி. வி. இராணி மகாலில் தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம் வழங்கும் மண்வாசனை பண் பாட்டு விழா சிறப்புடன் நடைபெற்றது கலைமாமணி—கவிஞர் முகவை இராசமாணிக்கனார் குழுவினர் மண் வாசனை பண்பாட்டுவிழா நிகழ்ச்சியை சிறப்புடன் நடத்தினர். மானமிகு. ஆனூர் ஜகதீசன் அவர்கள் தலைமையேற்றார். தமிழினக் காவலர் மானமிகு. கி. வீரமணி அவர்கள் பாராட்டுரை வழங்கினார்

தந்தை பெரியார் தமிழிசை மன்ற அமைப்பாளர்கள் திரு நா. அருணாசலம், கவிஞர். ந.மா. முத்துக்கூத்தன், திரு. அ. சௌரிராசன் திரு மு. கலைவாணன் ஆகியோர் யாவரையும் வரவேற்றனர். அந்த நாளில் தந்தை பெரியாருக்கு செட்டிநாட்டு அரசர், இந்த நாளில் ஆசிரியர் வீரமணி அவர்களுக்கு ஒரு. நா. அருணாசலம் என பாராட்டினர். தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம் அமைத்து தமிழிசை பரவ பாடுபடும் புரவலர், சென்னை அடையாறு நகலக உரிமையாளர் திரு. நா. அருணாசலம் அவர்கள் எல்லோராலும் பாராட்டப்பட்டார்,

# ஜனநாயகம்

— பேரறிஞர் அண்ணா —

தன்னிச்சையுடன் நடந்து கொள்ளும் அதிபர்கள் உள்ள பல நாடுகளிலே, இன்று சிக்கல்கள்.

சிக்கல்கள் உள்ளன என்பது மட்டுமல்ல, அந்தந் தலைவர்கள் அடக்கி வைக்க வைக்க, எதிர்ப்பு மடிந்து விடவில்லை, மறைந்துக் கொள்ளுகிறது. எதிர்பாராத வேளையில் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பி நாட்டிலே அமளியை, குழப்பத்தை மூட்டிவிடுகிறது. அமளிகாரணமாக மேலும் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டுவிடுகிறது. மக்களின் வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுப் போகிறது

உண்மையான ஜனநாயகம் ஒரு மரபினை ஏற்படுத்தித் தருவதுடன் ஒரு தலைவர்கள் வரிசையை அமைத்துத் தருகிறது; அல்லது அமைத்திட துணை செய்கிறது. ஒரு தலைவர் மறைந்த பிறகோ, அவர் செய்து வந்ததை, அதே முறையில் அதே அளவில் அதே தரத்தில் செய்ய முடியாமற் போயினும் மக்களின் நலனுக்கு ஏற்ற விதத்தில் தொடர்ந்து செய்து கொண்டு போக தக்க மற்றவர்கள் கண்ணுக்குத் தெரிகிறார்கள்,

ஜனநாயகத்தில், ஒரோர் சமயம் வியப்பளிக்கத் தக்க நட்சத்திரங்களாகத் தலைவர்கள் சிலர் திகழ்கின்றனர் என்றாலும், தொடர்ந்து ஒளிதரதக்க திருவிளக்குகள் வரிசையாக உள்ளன இடியோசையுடன் போட்டியிட முடியாது முரசு! ஆனால், முரசொலி தொடர்ந்து கிடைக்கும்; கரத்தின் தரத்துக்குத் தக்கபடி நாதம் எழும். இடியோசை கிடுகிடுக்க வைத்திடும். ஆனால் ஒசை தொடர்ந்து இருந்திடாது இடியோசையில் கிடைத்திடாது இன்ப நாதம்.

ஜனநாயக முறையை மாய்த்திட்ட முறை இடியோசை என்றால், ஜனநாயக முறையை முரசுக்கு ஒப்பிடலாம்.

உண்மையான ஜனநாயகத்திலே பற்று மிகுதியாகக் கொண்டுள்ளதால் தான் அந்தக் கடமையைச் செய்வதிலே எத்தனை இன்னல் ஏற்படினும்பொறுத்துக் கொள்ளுகிறோம் எத்தனை இழி மொழிகளை பழிச் சொற்களை தாங்கிக் கொள்ளுக்கிறோம்! பறந்து செல்லும் காக்கை எச்சமிடுகிறது; பாதையிலே செல்பவனின் பட்டுச்சட்டை பாழ்படுகிறது! அதனால் பயணம் நின்று விடுவதில்லை.

உண்மையான ஜனநாயகத்திலே தான் ஒவ்வொருவருக்கும் தத்தமது திறமைக் கேற்ப பணியாற்றிடும் உரிமை கிடைக்கிறது. கிடைப்பதனால் சமுதாயத்திற்குக் கூட்டுப் பணியின் பலன் முழுவதும் கிடைக்கிறது. மேம்பாடு பெறுகிறது.

அமைதியான வாழ்வு கொண்ட சமூகம் தான் அறிவுவளர்ச்சியில் அக்கரை காட்டிட முடியும்; அதன் மூலமாகத்தான் உலகத்தின் பொதுச் சொத்தான அறிவுச் செல்வம் மேலும் மேலும் வளர்ந்து, மனித குல மேம்பாட்டினுக்கு உதவிட முடியும். மக்களாட்சி இல்லாத நிலையில், பெரும்பாலான மக்கள் ஓநாயிடம் சிக்கிய ஆடுகளாகவோ, அல்லது பட்டியில் போட்டடைக்கப் பட்டவைகளாகவோ ஆக்கப் பட்டு விடுவர். மனிதத்தன்மை மாய்ந்து விடும். கற்காலத்திலே இருந்துவந்த நிலைமையை நோக்கி மனிதகுலம் துரத்தப்படும் கொடுமை படை எடுத்திடும்.

தம்பி! ஜனநாயகம் ஒரு அரசுமுறை மட்டுமல்ல; வாழ்கை நெறி, மனிதத்தன்மையை மேம்பாடுடையதாக்கிடவல்ல மார்க்கம்.

அறிந்து கொள்ளத் தக்கன பற்றியே ஆவலும் அக்கறையும் காட்டுவது அறிவாளர் இயல்பு.

நமக்கு நமது கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்தால் நாம் மேற்கொண்டிருக்கும் தொண்டு கடமை உணர்ச்சியின் மிது கட்டப்பட்டிருக்கிறது என்ற உணர்வும் இருக்குமானல். தகுதி மிக்கவர்கள், நிலைமையில் உயர்ந்தவர்கள், மாற்றுமுகாமில் இருந்தாலும் அவர்களிடம் நமக்கு மிகுந்த மதிப்பு எழுந்தாலும் கூட நமது கொள்கையை விட்டுக் கொடுக்கும் மனபோக்கு வரவே வராது நமது கொள்கைக்கு மறான கொள்கை கொண்டுள்ளோரிடம் மதிப்பு வைத்தால், நமது கொள்கை கெட்டொழியும் என்று எண்ணுவது பேதைமை. அது காட்டுமுறை. மக்களாட்சி மாண்பறியாதாரின் போக்கு!

---

## கழகம்தான் முக்கியம்



எனவே தான் கோழை என்றோ காட்டிக் கொடுப்பவன் என்றோ, வஞ்சகன் என்றோ, பிஞ்சு சொத்தை என்றோ, எதைச் சொல்லி என்ன எழுதினாலும் சரி, இயக்கத்திற்கு மட்டும் அதிர்ச்சி தராமல் இருந்தால் போதும் என்று கருதினேன்.

அண்ணா.

தம்பிக்கு 7 . 8 1955

இன்று வெறுப்பு, அருவருப்பு பகை எனும் உணர்ச்சியின் துணை கொண்டு மட்டுமே அரசியல் தம்முடன் மாறுபட்டிருப்பவர்களை மட்டம்தட்டி, தாம் சார்ந்திருக்கும் அரசியல் அமைப்பிற்கு ஏறறம் தேடித்தரமுடிவும் என்ற எண்ணம் தடித்துக் கிடக்கிறது.

கொள்கையில் நம்பிக்கை சுரந்ததால் அல்ல, இருந்த இடத்தில் கசப்பு வளர்ந்தால். பகைகக்கி இழிமொழி பேசியே!மாற்று முகாமினரை ஒழிக்க முடியும் என்ற நினைப்புடன் நாப்பறை கொட்டுகின்றனர் பழுதுபட்ட மங்கை பழுக்க மஞ்சளை முகத்தில் அப்பிக் கொண்டு பத்தினி வேடம் போட்டிடும் கதைபோல்!

மற்றக் கட்சித்தலைவர்களை மதித்திடுவது நமது கொள்கையை நம்மிடமிருந்து பெயர்த்தெடுத்து விடும் என்று எண்ணுவது பேதைத்ததனம்!

செல்வாக்கு சிதைந்து வரும் நிலையில்புதுகட்சி, பணம் சேர்த்து புதிய பலம் பெற நினைப்பது ஒடிக் கெட்ட முதியவன், ஆசை அடங்காததால் தங்க பஸ்பம் சாப்பிடுவதற் ந ஒப்பானது. முறுக்கு ஏறும் வேகமாக!! அதைவிடவேகமாக முறுக்கு தளர்ந்து விடும் முறிந்தே கூடப் போய்விடும்.

(காஞ்சி — 11, 7. 65)

ஒன்று மட்டும் தெரியும் எனக்கு — துள்ளும் மாடு பொதி சுமப்பதில்லை சுற்றித்திரிவோர் எந்த முனையிலும் நிற்பதில்லை

தம்பி! இழிமொழியால் எவரையும் தாக்கத் தேவையில்லை. தமிழ் அத்தகைய செயலுக்குப் பயன்படுதல் கூடாது. நமது உள்ளத்தைத் திறந்து காட்ட, உறுதியை வெளிப்படுத்தவே, தமிழ் பயன் படுதல் வேண்டும்.

பொங்கி வழிந்திடும், நெடுந்தூரம் நெடிப்பரப்பிடும்—கள் — பால் அல்ல !

வீரன் தாங்கிக் கொள்ள அறிந்தவன், தாக்கும் முறையிலும் ஒரு தரம், வரப்பு இவைகட்குக் கட்டுபட்டவன். மேலே வீழ்ந்து கடித்துக்குதறிடுபவன் அல்ல.

★ ★ ★

தம்பி! காலம், கனவானின் கருவி, ஏழையை வேலை வாங்குவதற்காகச் சீமான் கரத்தில் வந்து சேர்ந்த சாட்டை !!

காலம் கனவனிடம் முரட்டுதனம் காட்ட வில்லை. மெதுவாகத் தடவி கொடுக்கிறது. ஏழையையோ பிறாண்டிப் பியத்து விடுகிறது.

வேலையே இல்லை. நகளல்லாம் வாளாயிருக்கிறன். ஒய்வு அல்ல அது— பயன்படுத்தப்படவில்லை கொடுமை!

வேலை இருக்கிறது—வேலைசெய்யாமல் வாளாயிருக்கிறான்—ஒய்வு அல்ல சோம்பல்!

வேலை இருக்கிறது வேலை செய்த அலுப்பினால் வேலை நேரம் முடிந்ததும், கட்டை போல கீழே விழுகிறான்-தூங்கி விடுகிறான்-ஒய்வு அல்ல அது சோர்வு!

ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை- எப்போதும் சும்மா இருக்கிறான்- இதுவும் ஒய்வு அல்ல- இது ஒய்யாரம்!

ஒய்வு என்பது ஒரு உரிமை. வேலை செய்தவன். தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையிலே ஈடுபடுவதற்கு அது மருந்து !

⁂ ⁂ ⁂

பொறுத்துக் கொள்ளும் இயல்பு. நாம் மேற்கொள்ளும் கடமையிலே நமக்கு இருக்கும் அழுத்தமான பற்றின் விளைவு, கோழைத் தனத்தின் மறுபதிப்பு அல்ல!

⁂ ⁂ ⁂

பகுத்தறியும் போது உணர்ச்சிக்கு முதலிடம் இருக்காது உணர்ச்சிக்கு மட்டுமே முதலிடம் கொடுத்து விடுபவர்கள் பெரும்பாலும் பகுத்தறியும் திறனை முழுவதுமாகப் பெறமட்டர்கள். உணர்ச்சி ஒரு விதமான கொந்தளிப்பு- பகுத்தறிவு என்பது, கொதிப்பதை கிளறிக் கிளறிப் பார்த்து உள்ள பொருள் என்ன என்ன நிலையில் அஃது உள்ளது என்பதனை கண்டறிவது.

⁂ ⁂ ⁂

உணர்ச்சியால் உந்தபடுவதற்கும் அழுத்தமான நம்பிக்கையுடன் இருப்பதற்கும் உள்ள மாறுபாடு குறைகுடத்திற்கும், நிறை குடத்திற்கும் உள்ள வித்தியாசம் போன்றதாகும்.

⁂ ⁂ ⁂

நாடு எனும் அடிப்படை வலிவும் பொலிவும் உள்ளதாக இருக்க வேண்டும் அதற்கு ஊறு விளைப்பவர் எவரெனும், அவனை எதிர்த்தெழுந்திடும் கடமை எல்லா கட்சிகளுக்கும் உண்டு! அந்தக் கடமை ஆற்றுவதிலே கட்சிகள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு, நின்றே தீரும்!

⁂ ⁂ ⁂

மக்களாட்சி முறை உள்ள நாடுகளில் நாட்டுப் பற்று மிகுந்து காணப்படும். ஏனெனில் நாட்டு நிலையை உருவாக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருக்கும் உண்டு என்ற கடமை உணர்ச்சியும், நாட்டிலே

கிடைத்திடும் வசதிகளில் நமக்குஉரிய பங்கு உண்டு என்ற உரிமை உணர்ச்சியும் அந்த மக்களுக்கு நிரம்ப ஏற்படுகிறது.

'யாரோ' ஆட்சி நடத்தும் இடம் அல்ல இது — 'நாம்' ஆட்சியை அமைத்துள்ள நாடு இது — நம் நாடு — என்ற உணர்ச்சி மேலோங்கி நிற்கிறது.

அமைந்திடும் ஆட்சி நல்லதாக இருக்கிறதா அல்லவா என்பதற்கு நாமே பொறுப்பு என்ற எண்ணமும், ஆட்சி சரியான முறையில் நடத்தப் பட்டு வருகிறதா என்று கவனித்துக் கொள்ள வேண்டியவர்கள் 'நாமே' என்ற உணர்வும் ஆட்சியை மாற்றி அமைத்திடும் உரிமை பெற்றவர்கள் நாமே என்ற உணர்வும் மேலோங்கி நிற்பது ஜனநாயக முறையிலே தான்

ஜனநாயக நாட்டில், பிறந்தோம், நாட்டில் உழைக்கிறோம், நாட்டில் வாழ்கிறோம் என்பதுடன், நாட்டில் ஆட்சியை நல்ல முறையில் அமைப்பவர்களும் நாமே என்ற உணர்ச்சி கிடைக்கிறது அஃது ஓர் புது வலிவினை நாட்டு மக்கள் ஒவ்வொருக்கும் தருகிறது.

பிறர் கட்டளை இடுவது கொடுமை, அது போன்றே தனி மனிதர்களுக்கே தமக்குள்ளாவே, நாட்டுப் பற்றுமுக்கியமா, மதப்பற்று முக்கியமா என்பது போன்ற குழப்பம் ஏற்படுவது அறியாமை அல்லது அகந்தையின் விளைவு.

நாட்டுப் பற்று மதப் பற்று அந்த நாட்டிலே உள்ள அனைவரும் ஒரே மதத்தினராய் இருந்தால் மட்டுமே ஏற்படும் என்பது மடமை அதே போல மதப்பற்று காரணமாக தனது 14 நாட்டிடம் பற்று கொள்ளாது அதே மதத்தைக்கொண்டு உள்ள வேறு நாட்டுக்கு துணை நிற்பதும் மடமை.

எந்த ஒரு பற்றும் மக்களைக் கொடுமைக்கு ஆளாக்கிடப் பயன் படுத்தப்படுமானால், அந்த பற்றுக்கு இயற்கையாக உள்ள தூய்மை கெட்டொழிந்து போகும் 'பற்று' பாது காப்புக்கு, வளர்ச்சிக்கு பயன் படுத்தப் படவேண்டுமேயன்றி, பிற பற்றுகளை அழித்திடப் பயன் படக் கூடாது.

நாட்டுப் பற்று அல்லாது வேறு எந்தப் பற்றுக் காரணமாக நாம் எவ்விதமான செயலில் ஈடுபடுவது போக்கினை மாற்றிக் கொள்வது என்பது பற்றி நாம் நமது அறிவுத் தெளிவினைக் கொண்டு கண்டறிந்து முடிவெடுக்க வேண்டுமேயன்றி பிறருடைய கருவியாகி விடக் கூடாது.

---



கட்சியை விட்டு எவராவது பிரிய நேரிட்டால் உண்மையில் கூறுகிறேன்; வருத்தந்தான்; கூடுமான வரையில் கூடிவாழ்வதையே நான் விரும்புகிறேன், சுவரிலிருந்து சிறு ஆணி பெயர்க்கப்பட்டாலும் ஆபத்தில்லை என்றாலும் பார்க்க நன்றாக இராது என்று நினைப்பவன் நான்.

அறிஞர் அண்ணா.
தம்பிக்கு 8 . 5 . 1955

# அண்ணாவின் மேடைத்தமிழ

அ. கி. மூர்த்தி—தஞ்சை மாவட்ட பேரவை செயலர்

## 3. அண்ணாவின் பேச்சுகளின் அரிய இயல்புகள்

விழுமிய பேச்சின் எல்லா வியத்தகு பண்புகளையும் அண்ணாவின் உரைகள் பெற்றுள்ளன. ஒவ்வொன்றாக அவற்றை இங்குச் சுருக்கமாகக் காண்போம். அதற்கு முன் அண்ணா பேச்சின் இலக்கணம், அதன் நோக்கம் ஆகியவை பற்றியும் ஒரு சிறிதுபார்ப்போம்.

பேசும் பொருளைக் கையாளல்: தான் எடுத்துக் கொண்ட பொருள் எதுவாயினும், அதைப்பற்றிய ஒருதெளிவான அறிவை அவையோருக்கு அளிப்பது அண்ணாவிற்குரிய தனி இயல்பு. அண்ணா பேச்சைக் கேட்கும் எவரும் தேனில் மொய்த்தது போல் திளைத்திருப்பர், தாம் பேசும் பொ ைளை அண்ணா கையாளும் அறிவார்ந்த நிலையே அதற்குக்காரணம். மேலும் பல்துறை அறிவையும் தம் பேச்சையும்க் கேட்போருக்கு அண்ணா அளிக்கின்றார்.

இலக்கணம்: சொல், பொழிவு, பேச்சு என்பனவெல்லாம் பேச்சுக் கலையில் பயன்படும் ஒரு பொருள் பன்மொழிச் சொற்கள். பின் பேச்சுக்கு இலக்கணந்தான் என்ன? எளிதாகக் கூறவேண்டுமெனில், முறையான பொழிவே பேச்சாகும் வள்ளுவர் வாய்மொழியின்

---

# திட்டங்களைத் தீட்டும் அதிகாரம்

நான் ஒன்றை மட்டும் வலியுறுத்திக் கூற முடியும். மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவிந்திருக்கும் வரையில் கோடிக்கணக்கில் செலவு செய்து நிறைவேற்றப்படும் திட்டங்கள் பலனளிக்கப்போவதில்லை. திட்டங்கள் டில்லியிலே தீட்டப் படுவது நிறுத்தப்பட்டு. மாநிலங்களில் திட்டங்கள் வகுக்கப் படவேண்டும். டில்லி சர்க்கார் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மா நிலத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துகின்ற வகையில் இயங்க வேண்டுமே தவிர, திட்டங்களைப் போடுவதற்கும் நிதியைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கும் அதிகாரங்கள் இருக்கக்கூடாது; மாநிலங்களுக்கு திட்டங்களைத் தீட்ட அனுமதி கொடுத்தால் தான் பலன் தரத்தக்க வகையில் திட்டங்கள் அமையும்.

11- 1- 59 திராவிட நாடு

படி, அது பிறப்பினிது சொல்தலாகும். அதாவது பல நயங்களுடன் நலன்களுடனும் கூறவேண்டிய பொருளை வரிசைப்படுத்தி இனிமையாகக்கேட்போர் உளங்கொள்ளும் வகையில் கூறுவதாகும். இவ்விலக்கணத்தை அண்ணாவின் பேச்சுக்கள் முதன்மையாகக் கொண்டுள்ளன. இவ்வாறு கூறுவது அண்ணாவுக்குக் கைவந்த கலை.

நோக்கம் : வீழ்ச்சியுற்ற தமிழகம் மீண்டும் எல்லாத் துறைகளிலும் எழுச்சிபெற வேண்டும் என்பதே அண்ணா பேச்சுகளின் தலையாய நோக்கமாகும், பொதுமக்களை விழிப்படையச் செய்யும் ஒரு சிறந்த கருவியாகவே பேச்சுக் கலையை அண்ணா கருதினார். அவ்வகையில் அது முழுக்க முழுக்கப் பிரச்சார நோக்குமுள்ளது என்பதை ஆராய்சியாளர்கள் மறந்தலாகாது. இந்தப் பண்பை அவர்தம் பேச்சுகளிலிருந்தும் எழுத்துகளிலிந்தும் பிரிக்கவும் இயலாது.

நிகழ்தும் பாங்கு : அண்ணா பேசும் முறையே தனி பாணியினைக் கொண்டதும் அவர்தம் பேச்சில் தொடக்கம், மையம், முடிவு என்னும் மூன்று பகுதிகள் இருக்கும்.

தொடக்கத்தை ஒரு குறிப்போடு தொடங்குவார். குறிப்பு பாராட்டு, வருத்தம், அறிவிப்பு, மேற்கோள் முதலியவற்றோடு தொடங்கும்.

மையம் என்பது பேச்சின் வளர்ச்சிப் பகுதியாகும். படிப்படியாக ஒரே சீராக அது வளரும். இதில் உயர்ந்த கருத்துகள், அசைக்க

---

# பத்திரிக்கைத் தொழில்

இலாபமா? ஆள் தப்புவதே சிரமமல்லவா சமூகத்திலே காணப்படும் மூட நம்பிக்கைகளை முறியடிக்க பழங்கால ஏற்பாடுகளிலே உள்ள கேடுகளைக் களைய சுரண்டல் முறைகளை எதிர்க்க மக்களின் பொது நலனைக் கெடுக்கும் புல்லர்களுக்கு எந்த இடத்திலும் எந்த வகையிலும் இல்லாதபடி செய்ய துணிவு கொள்வதே கஷ்டம். துணிந்தாலும் அந்த முறையிலே பத்திரிக்கையை நடத்தினால் அப்படிப்பட்ட பத்திரிக்கைக்கு ஆதரவு கிடைப்பது மிகமிக கஷ்டம் நடத்துபவருக்கு அது ஒரு தொழிலாகாது துயரமே தரும். இலாபம் கிட்டாது பழியே கிடைக்கும். எதுவானாலும் சரி என்று அஞ்சாது அந்த அரும்பணியசற்றும் சிலருக்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்படும்.

பத்திரிக்கைத் தொழில் பற்றி
வானொலியில் அறிஞர் அண்ணா 1948

முடியாத மேற்கோள்கள், நாட்டுசிக்கல்களுக்குரிய நல்ல தீர்வுகள் முதலியவை அடங்கி இருக்கும்.

வேண்டுகோள், புகழ்மாலை, கருத்தேற்றம், உறுதிமொழி முதலியவற்றோடு முடிவு நிறைவுபெறும்.

அண்ணாவின் முதல் பட்டமளிப்பு விழா உரையான எங்கிருந்தாலும் ஆற்றுச் சமுகப்பணி என்பது இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு.

இந்த விழாவில்......எனக் கேட்டுக் கொள்கிறேன். முதல்பத்தி தொடக்கமாகும். இது பாராட்டோடு தொடங்குகிறது.

இரண்டாவது பத்தியிலிருந்து இறுதிப்பத்திக்கு முன் வரை வளர்ச்சிப் பகுதி. இறுதிப் பத்தி முடிவாகும்.

5. தன்வெளிப்பாடு : பல பேச்சுகளில் அண்ணா அவர்கள் தம்மை வெளிப்படுத்துகின்றார். எ-டு. என்னிடம் இருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காஞ்சிபுரம்தான் காரணம் 4 பக்கம் 103, அண்ணாவின் தலைமை உரைகள்,

6. தன்வரலாறு பல பேச்சுகளில் அண்ணா தன்னைப் பற்றிக் கூறுகின்றார் 'நான் கல்லூரியில் ......என்று கூறினேன்' தலைமை உரைகள் பக்கம் 48.

7. கலைமக்களுக்காகவே கலை கலைக்காகவே என்பதை அண்ணா அவர்கள் அறவே வெறுப்பவர்கள். கலைமக்களுக்காக என்பது அவர்தம் துணிவு. இதைப் பல பேச்சுகளில் அவர் வற்புறுத்திச் செல்கின்றார்.

8. மரபும் மதிப்பும் அண்ணா மரபைப் பெரிதும் மதிப்பவர் போற்றுபவர். அவர்தம் பண்பு மதிப்பு மிக உயர்ந்தது கற்றறிவாளர்கள். சான்றோர்கள் ஆகியோரை அவர் மிகஉயர்வாகப் போற்றுகின்றார். திருக்குறள்; விவிலிய நூல், திருக்குறான் முதலிய நூல்களைப் பெரிதும் மதிப்பவர். மரபும் மதிப்பும் அவருக்கு இரு கண்கள் போன்றவை.

9. தொலை நோக்கு அண்ணா நெடிய தொலை நோக்கு படைத்தவர், மையத்திலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி (காங்கிரஸ் ஆட்சி) இருந்த வரை, மைய மாநில உறவுகள் குறித்த பேச்சுக்கே இடமில்லை இப்பொழுது பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால், இந்த உறவுகள் மறுபரிசீலனைச்

செய்யப்பட வேண்டும் என்பது அண்ணாவின் அழுத்தமான கருத்தும். கலந்துரையாடல் மூலமே சககாலிகளுக்குத் தீர்வு காணவேண்டும் அதிக அளவு வன்முறையைப் பயன்படுத்தினால் பலன் இராது. எ-டு. காஷ்மீர் பிரச்சினை, பஞ்சாப் பிரச்சினை, இலங்கைத்தமிழர் பிரச்சினை.

10. மனிதநேயம் இது மக்கள் மீதுள்ள தனியா அன்பு. அண்ணா பேச்சுகளின் மணிமுடியரசுக் கருத்தாகும் இயல்பு இதுவே. அண்ணா மக்களை பெரிதும் விரும்பினர். மக்கள் இல்லையேல் தானில்லை, அரசு இல்லை, ஆட்சி இல்லை என அண்ணா உறுதியாக நம்பினார். 'எங்களை நம்பிய மக்களுக்கு நன்மை ஒன்றும் செய்ய முடியவில்லை என்றால், இந்தப்பதவியை உதறித் தள்ளிவிட தயங்க மாட்டோம்' என்று கூறியவர் அண்ணா தம் சாவிலும் சரித்திரம் படைத்தவர் அண்ணா. 'ஜன்னல்கள் ஏன் மூடி இருக்கின்றன? வெளியே என்ன இரைச்சல். நான் அங்குப் போக விரும்புகிறேன்' தம் இன்னுயிரை நீக்குமுன் இதுவே அண்ணா கூறிய கடைசி சொற்கள்தான் சாகும் பொழுதும் தன்னை அரியனை ஏற்றிய மக்களை அண்ணா மறக்கவில்லை. தாயுள்ளம்போல அவ்வளவு பெரியது அண்ணாவின் மனித நேயம். அண்ணாவைப்போல் மக்களை விரும்பிய தலைவர்கள் உலகில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் இருக்க இயலும்.

இவ்வாறு நம்மை வியக்க வைக்கும் பல அரிய பண்புகளைக் கொண்டவை அண்ணாவின் பேச்சுகள்.

அடுத்த இதழில் அண்ணா பேச்சுகளின் நடை

---

அந்த நிகழ்ச்சி (வானொலியில் 1948ல் அண்ணா காந்தியார் பற்றி பேசினார்.) முடிந்த சில நாட்களுக்கெல்லாம் காங்கிரஸ் தேசிய கவியான நாமக்கல் கவிஞரை ஓரிடத்தில் நான் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் என்னை பாராட்டனார். காந்தியடிகளின் அருமை பெருமைகளை பலர் உரைக்க கேட்டிருக்கிறேன். ஆனால் ரேடியோவில் தாங்கள் எடுத்து சொன்னதை கேட்டபோது நான் மனம் குளிர்ந்தேன். யாரும் அப்படி சொல்லியதில்லை' என்று தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார்.

வேலூர் காந்தியார் சிலை திறப்புவிழா
சொற்பொழிவு—அண்ணா—1951

(தொடரும்)

JL
M2117 N92KN
N93.1.13
217212
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (13)

— Dr. சி என். ஏ. பரிமளம் —

பல வருட காலயாகவே அந்நியஆட்சி நீங்கத்தான் வேண்டும், அதுதான் எமது விருப்பம் ஆனால் ஆங்கில ஆட்சியை ஒழித்து விட்டு அந்த இடத்தில ஆரிய ஆட்சியை எற்படுத்தவே காங்கிரஸ் முயலு கிறது. அதற்காகவே நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறோம். காங்கிரஸ் கையாளும் முறைகள் சரியானவை அலல, என்று படுவதால், நாங்கள் அம்முறைகளை ஆதரிக்க வில்லை. நாங்கள் காங்கிரசை எதிர்த்த தாலேயே சுயராஜ்யத்துக்கு விரோதிகளல்ல —| அந்நிய ஆட்சியை விரும்புவர்கள் அல்ல, என்பதை ஆயிரமாயிரம் மேடைகளில் பேசி இருக்கிறோம், வெள்ளைக்காரனை நீ நாளைக்கு போ என்று சொன்னால், நாங்கள் இன்றே போ என்று கூறுகிறோம் — என்று பேசி இருக்கிறோம்..............................

...... ஆகஸ்டு 15 ந் தேதியை மகிழ்ச்சி தரக் கூடிய நாளகவே கருத வேண்டும், அதுவே இதுவரை நாம் கொண்ட போக்குக்கும் நமது கொள்கைக்கும் எற்றது......

...... ஆகஸ்டு 15 ம் தேதி அன்னிய ஆட்சி ஒழிந்த நாள். நம்மை நலிய வைத்த வெள்ளையர் ஆட்சி நீங்கிய நாள். ஏகாதிபத்திய பிடி ஒழிந்த நாள், இரு எதிரிகளில் ஒரு எதிரி ஒழிந்த நாள் (மிச்சமிருப்பது பனியா ஏகாதிபத்தியம) என்பதிலே நமக்கு மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ள காரணமும் இருக்கிறது ......................

......உலகம்முழுவதும் கூர்ந்து கவனிக்கும், ஒரு மகத்தான சம்பவத்தை நமது கொள்கையை மட்டுமே அளவு கோலாக கொண்டு அளந்து பார்ப்பதோ. உதாசீனம் செய்வதோ சரியாகாது......

......காங்கிரசார் பழி சுமத்தியது போல நாம் பிரிட்டிஷாரின் அடிமைகளல்ல' என்பதை விளக்க நமக்கு இருக்கும் ஒரு நாள் கடைசி நாள் ஆகஸ்டு 15 நாம் ஏன் அந்தச் சந்தர்ப்பத்தை இழந்து அழியாத பழிச்சொல்லைத் தேடிக் கொள்ள வேண்டும்...............

......அகவே ஆகஸ்டு 15 ம் தேதி பற்றி திராவிடக் கழகம் தன் கருத்தை இந்த நேரத்திலும் மாற்றிக் கொள்ள முடியும் — மாற்றிக் கொள்ளலாம் — முடியுங் கூடத்தான்; அதற்கு முன் மாதிரியாக சேலம் சம்பவம் இருக்கிறது.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் சேலத்திலே கப்பராமரயணத் தைக் கடைசி நேரததில் ஒரே தந்தியின் மூலம் கொளுத்த வேண்டா மென்று கூறியவர் ஒருவர். நான் ஒரு சாமான்யன். அவர் கட்சிக் காக ஒய்வு நேரத்திலும் உழைத்ததில்லை, நான் உழைத்து அலுத்த வன். அவர் இன்று இந்திய சர்க்காரிலே நிதி மந்திரி!

நானோ இதே அறிக்கையின் விளைவாகவே கூட, உங்களில் பலராலே கூட, சந்தேகத்தும், நிந்தனைக்கும் ஆளாகக் கூடிய நிலை யில் உள்ளவன், ஆனால் நான் கூறுவது உள்ளத்தில் இருந்து வருபவை.................................

...... இது கட்சி கட்டுப்பாட்டையும் தலைவரின் அறிக்கையை யும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முன்வருவதானாலும் என்வாழ் நாளில் பிரிடிஷ் ஆட்சி கூடாது என்ற கொள்கையைக் கொண்டவனே நான் என்பதை மக்களுக்கு கூற எனக்கிருக்கும் ஒரே நாளசன ஆகஸ்டு 15 ம் தேதியின் முக்கியத் துவத் துக்காக வேண்டி கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறன். தலைவரும் கட்சியும் என் போக்கு தவறு என்று கருதி என்னைக் கட்சியை விட்டு நீக்கினாலும், நான் சமூக சீர்திருத்கம், பொருளாதார சமத்துவம், திராவிட தனி அரசு எனும் அடிப்படை கொள்கைகளைக், கட்சிக்கு வெளியே இருத்தாகினும் செய்து வருவேன் என்பதைக் கூறி இந்த அறிக்கையை முடிக்கிறேன்.

வணக்கம்

சி. என். அண்ணாதுரை

10 . 8 . 1947

..................

பொறுப்பிலே ஈடுபாடு கொள்ளாதவர்கள் எதை எம் முறையில் கூறிடி னும், நாம் அது குறித்துக் கவலை கொல்லக்கூடாது என்ற திட மனம் கொண்டிட வேண்டும். நமது தோழர்கள் அத்தகைய திட மனம் கொண்டோராக இருந்திடுவதாலேயே, பலஆண்டுகளாக, தனித் திறமை காட்டிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள் மூட்டிவிடப் பட்டகோள்கள், நமது கழகத்தை ஏதும் செய்திட இயலாது. விழ்ந்து பொடிப் பொடியாகிவிட்டன.

இந்தியாவுக்குக் கிடைத்திடும் 'சுயராஜ்யம்' துக்கராஜ்யம் என்று பெரியார் கருதி, ஆகஸ்ட்டு பதினைந்தாம் நாளைத் துக்க நாள் என்று நடாத்திட அறிக்கை விடுத்ததை நான் மறுத்ததனை அறிந்தி ருப்பாய்.

தம்பி! அப்போது என்னைப்பற்றிக் கட்டிவிடப்பட்ட வதந்தி கள் கணக்கில் அடங்கா!

இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது. ஒரு வெடிச் சிரிப்புக் கிளப்பிவிட்டுச் கேட்பார் ஒருவர் என்ன விலை கெஜம்! நேர்த்தியாக இருக்கிறதே சட்டைத் துணி? கதர் தானே!

கதர் அல்ல ஐயா வழக்கமாக நான் போடும் கைத்தறித் துணி தான்.

கதர் என்று பார்த்தேன். கைத்தறித் துணியா!

தம்பி! கேலி புரிகிறதல்லவா? ஆகஸ்ட்டு பதினைந்து துக்க நாள் அல்ல என்று நான் எழுதினால், நான் காங்கிரசாகி விட்டேன் என்று பொருள் கொண்டு, பலப்பல வதந்திகளைக் கிளப்பினர்.

நான் மட்டும் வதந்திகளின் தன்மையையும். அவற்றினைக் கிளப்பிவிடுவோரின் போக்கினையும் ஓரளவு தெளிவாகத் தெரிந்துக் கொண்ட நிலையினனாக இல்லாதிருப்பின், என்னென்ன நேரிட்டிருக்கக்கூடும் என்பதை எண்ணும்போது நடுக்கமே எடுக்கிறது.

வதந்திகளைக் கிளப்புகின்றவர்கள், பொறுப்பான பதவியினராக இருந்திடினாவது, அவர்களைக் கேட்கலாம், இது சரியா, முறையா என்று. தம்பிக்கு 12—6—66

அறப்போர்,

ஆகஸ்ட் 10 ம் தேதி ( 10, 8. 1948 ) ஆரம்பமாகிறது- ஆற்றல் மிக்க திராவிடத் தோழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த' அழைப்பு'கிடைத்து விட்டது, ....................

...... துவக்கம். முதல் படைத் தலைவனாக (சர்வாதிகாரியாக) இருக்கும் சிறப்பிடமும் வாய்ப்பும், எனக்களித்த பெரியாருக்கு. என் நன்றி கமிட்டியாருக்கும் கழகத்தாருக்கும் என் நன்றி அறப்போர் நடந்த உங்கள் பேராதரவை நம்பி, ஒப்புக் கொண்டு விட்டேன்-படை வரிசையில் வந்து நில்லுங்கள் என்று உங்களை அன்புடன் அழைக்கிறேன்

அண்ணா துரை

8. 8. 48. 1 வது சர்வாதிகாரி,

வேண்டுகோள்

அன்புடையீர்,

வணக்கம், சென்ற ஏழு ஆண்டுகளாகக் திராவிட பெருங்குடி மக்களின் நலன் கருதி நடத்தப்பட்டு வரும் திராவிடநாடு இதழின் மீது சென்னை அரசியலார் தம் அடக்குமுறை பாணத்தை இட்டபோது

எழுதியுள்ளார்கள். 25. 6. 49ம்நாளுக்குள் ரூ 3000. ஜாமின் தொகை கட்டித்திர வேண்டும் என கட்டளை பிறப்பித்துள்ளார்கள். 'திராவிட ருக்கு.' திராவிட மக்களின் நலனுக்காகப் பாடுபடுகிறது என்பதை அறி விக்கவும். திராவிட மக்களின் ஆதரவு அதற்கு உண்டு என்பதைக் காட்டவும், இவ்வாய்ப்பை ஏற்று தங்களாலான நன் கொடையை இன்நெருக்கடி தீரும் வகையில் அளித்தருளக் கோருகிறேன்.

காஞ்சிபுரம் அன்பன்
9, 6. 1949 அண்ணா துரை

நன் கொடை தந்துதவிய அன்பர்கள்.

| | | | |
|---|---|---|---|
| வாலாஜாபாத் | W K தேவராசன் | | 100- 0-0 |
| காஞ்சிபுரம் | V- புட்டாசாமி | | 100- 0-0 |
| ,, | அ. க. தங்கவேல் | | 100- 0-0 |
| ,, | N, K, கணபதி | | 100- 0-0 |
| ,, | N, K, அரங்கநாதன் | | 100- 0-0 |
| ,, | A. பாலகிருஷ்ணண் | | 100- 0-0 |
| ,, | K-S- முனுசாமி | | 50- 0-0 |

குறிப்பு: மேலும் நன் கொடையை விரைவில் எதிர் பார்க்கிறேன்

வணக்கம்
12, 6. 49
திராவிட நாடு இதழ்

## எனது நன்றி

அரசியலார் 'திராவிட நாடு' இதழின் மீது தாங்கள் அடக்கு முறை பாணத்தை ஏவி, ரூபாய் மூவாயிரம் ஜாமீன் கடடுமாறு கட்ட ளை பிறப்பித்ததை. இது 'திராவிட நாடு' இதழின் மீது மட்டும் ஏவப்பட்ட பாணமல்ல, திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரும் மீதுமே ஏவப்பட்ட பாணம் என்பதை எடுத்துக்காட்டும் முறையில் அரசாங்கத்தின் அடக்கு முறை காணிக்கையாக அவர்களால் கோரப் பட்ட ரூபாய் 3000-0-0 யும் அன்பர்கள் தந்துதவியுள்ளார்கள், ஜாமின் தொகை கட்ட ரூபாய் மூவாயிரம் தேவையென்று வேண்டு கோள், ஒரு வாரத்துக்குள்ளாகவே குறிப்பிட்ட தொகை சேர்ந்து விட்டது.

அரசியலாரின் அறை கூவலை ஏற்று அன்புடன் உதவி செய்து ஆதரித்த அனைவருக்கும் எனது நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜாமின் கட்டுவதற்காக குறிப்பிடப்பட்ட தொகை கிடைத்து விட்டபடியால், இனி அன்பர்கள் இதற்காக பணம் அனுப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்வதுடன் மீண்டும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்

அண்ணா துரை

19 · 6 · 1949

...... பெரியாரின் உடற் பாது காபுக்கான பணிபுரிய நான். நீ யென்று போட்டியிட்டுக் கொண்டு வர நூற்றுக் கணக்கிலே தூய உள்ளம் படைத்தவர்கள் உண்டு. அவர்கள் யாரும் தேவை படவில்லை மணியம்மை வர நேரிட்டது! புயல் நுழைகிறது என்று கருதியவன் நான் புல்லன் என்று தூற்றப்பட்டேன் ......................

—7—49

திராவிட நாடு

......உத்தமர் காந்தியார் வெறி கொண்ட ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனும் செய்தியை ரேடியோ மூலமாக கேள்விப்பட்டேன். பதறினேன் அப்போது சென்னை வானொலி நிலையத்தார் அழைத்தார்கள். காந்தியடிகளைக் கொன்றவன் மராட்டிய பார்ப்பனனான கோட்சே என்பவன். அதனால் மக்களின் ஆத்திர வெறி, அக்குலத்தார் மீது பாய்ந்து விடுமோ என்று அஞ்சிய காரணத்தால் என்னை... அழைத்துப் பேசச் சொன்னார்கள். கயவனாய் இருந்தால் கட்சிவெறி கொண்டவனாயிருந்தால் அந்த நேரத்தை பயன்படுத்திக் கொண்டு நாட்டில் விபரீதங்கள் பல ஏற்படுவதை கண்டிருக்க முடியும். அப்படிப்பட்ட விபரிதங்களைக் கண்டு கைகொட்டும் கருத்தற்வனல்ல நான்.

உத்தமரை ஒருவரின் வெறி கொன்று விட்டது. அதற்கு பார்ப்பன மக்கள் மீது பழி சுமத்தக் கூடாது என்று எடுத்துரைத்தேன். உத்தமரின் சேவைகளை எடுத்துரைத்தேன்........

சொற்பொழவு

காந்தி சிலை திறப்பு

வேலூர் நகராட்சி 1951

தொடர்ச்சி 15-ஆம் பக்கம் பார்க்க

# பிறந்தநாள் செய்தியும் - வேண்டுகோளும்

திரு கே. டி. எஸ். மணி

[ திரு. K. T. S. மணி அவர்கள் காஞ்சியை சேர்ந்தவர் நீண்டநாள் திராவிட இயக்கத்தவர், சுயமரியாதைக்காரர், அறிஞர் அண்ணாவால் வளர்க்கப்பட்டவர், பொதுநலத் தொண்டர், பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் புரவலர் ]

அகிலும் தேக்கும் அழியா குன்றம்
அழகாய் முத்து குவியும் கடல்கள்
முகிலும் தென்றலும் முழங்கும் நஞ்சை
முல்லை காடு மணக்கும் நாடு
என்ன இல்லை இந்த திரு நாட்டில்
என்று கேட்க வைக்கும் தமிழ் நாட்டில்
வளங்கள் குறைந்து — வாழ்வோர்
நிலை தாழ்ந்து — வறுமை
பசிப் பிணியோடு — குடிக்கும்
தண்ணீருக்கும் பஞ்ச மேற்பட்டு
நிலை குலைந்த தமிழ் நாட்டில்
வாழ்வோர் பல கோடி!
வாழ்ந்த தமிழகமே! நீ விழ
காரணம் என்ன? என்று
கேட்டு — மக்களை உணரவைத்த
ஐயா — அண்ணாவை இழந்த
தமிழகத்தில் வாழ்வோர் பல கோடி!
ஐயா கொள்கையை ஏற்று
அண்ணா வழியில் நடந்து
நலிவுற்ற தமிழகத்தை
தலை நிமிர செய்ய
வந்த தலைவர்கள் பலர்! பலர்!
கரடு முரடான பாதையை
கடும் உழைப்பால்
தியாக மனப்பாங்கோடும்
சுயநலம் இன்றி — பிறர்
எதிர்ப்புக்கு மத்தியில்
பாதையை சீர் செய்து

பழியெல்லாம் ஏற்று
விழ்ந்த தமிழகத்தில்
விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி
ஆட்சியை அமைத்து
அதில் அமரச் செய்துவிட்டு
போனார் அண்ணா!
போகுமுன் இந்த இயக்கத்தை
எவராலும் அழிக்க முடியாது
அழிவும் — பிரிவும் வந்தால்
அது நம்மால் தான்
வர வேண்டுமே அன்றி
எதிரி எவராலும் இதனை
அழிக்க பிரிக்க இயலாது என்று
அண்ணா எழுதி வைத்ததை
எடுத்துச் சொல்லி — பிரிவை
தடுக்க முயன்ற ஐய — சொல்லை
கேட்டு நடக்கவில்லை
பேரறிஞர் அண்ணாவுக்கு
பின்வந்த தலைவர்கள்!
அதை எண்ணி உள்ளம்
குமுறிய ஐயா — தன் பணியை
நிறுத்தாமல் தொடர்ந்தார்!
இயற்கை அவரை விட்டு வைக்க வில்லை!
அவர் மறைக்கு பின்னாலேயும்
தமிழகத்தில் வாழ்வோர் பல கோடி!
வாழ்பவர்கள் எல்லாம்
ஓர் நாள் பிறந்தவர்கள் தான்!
அவர்களிலே எத்தனை
பேர்களுக்கு பிறந்த நாளை பற்றி
எண்ணிப்பார்க்கும் நிலை உள்ளது!
வாழ்க்கை பிரச்சனையே
பளுவாகி நிற்பதாலே
வேறு சிந்தனை வர
வழி எது அவர்களுக்கு!
வாழ்க்கையே பளுவாக்கி
பற்றா குறையை நித்தம் நித்தம்
பரிசாக வழங்கும் ஆட்சி
மத்தியிலும்- மாநிலத்திலும்
வீற்றிருக்கும் ஆட்சியாளரை
ஐயா- அண்ணா கொள்கைவழி

நின்று நடப் போர்குண்டு!
சோர்விலா தொண்டர்களை வழி நடத்தும்
பூப்புகார் கண்ட பெருதச்சன்
புவியோர் போற்றும் கரிகாலன்
புண்பட்ட தொண்டர்க் கெல்லாம்
புண்ணாற்றும் புகழ் மிக்கோன்
வள்ளுவர் கோட்டம் கண்டோன்
பேரறிஞர் அண்ணாவின்
இதயத்தை இரவலாக பெற்றோன்- இன்றைய
இந்திய நாட்டிலேயே- அரசியல்
அனுபவத்தில் தலை சிறந்தவர்கள்
வரிசையிலே சிறப்பிடம் பெற்றோன்
தமிழக அரசியல் தலைவரில் — இவரை
மிச்சுபவர் எவரும் இல்லை என்ற
பெருமைக்கு உரியவன்
ஈடு தேடினாலும் — ஆள்
இல்லை என பெருமை கொண்டவன்
இவருக்கு போட்டி எவருமில்லை
இயக்கத்தில்! கழகத்தில்! தொண்டர்களி இதயத்தில்!
இந்த தலைவன் நடத்தும்
இயக்கம் தான் தமிழர்க்கு
வாழ்க்கை பளுவை குறைக்க
வழி காணும் என்று
நம்பி இருக்கும் நிலை இன்று
தமிழகத்தில் இருக்கும் போது
வளர்ந்துவிட்ட தன் தலைமைக்கு
வாத பிரதி வாதம் இல்லாத போது
வாரிசு பிரச்சனைக்காக
தமிழகத்தையே காத்து
வழி நடத்தும் முக்கிய பணியை விட்டு
திசை மாறி போவது கண்டு — மக்களை
திகைக்க வைப்பது யார் குற்றம்?!
''காலத்தின் குற்றம் தான்''
என்று சொல்வதன்றி — வேறு
காரணங்கள் உண்டோ சொல்வீர்!
இந்த நிலை கண்டு — ஏங்கி — திகைத்து
மனம் குமுருவோர் பல கோடி!
அதில் நானும் அடக்கம்!
ஓடி ஆடி பணியாற்றும் நிலை
பாழ்பட்டு போன நிலை!

ஊருக்கு உழைப்பதற்கு
உள்ளத்தில் இடம் உண்டு!
உடல் நிலை தான்
ஒத்துழைக்க மறுக்கிறது!
நிலையை நான்
உணர்ந்து கொண்டேன்!
நெடுங் காலம் வாழ
கொள்ள ஆசை எனக்கு உண்டு
வாழ்கின்ற நாள் எனக்கு எவர் உதவியும் இன்றி
வாழ்கின்ற நிலையாக
இருக்க வேண்டும்!
எடுக்க பிடிக்க என்ற நிலையில்
ஒரு நாள் கூட நான்
வாழ விரும்பவில்லை!
என் வாழ் நாளெல்லாம்
பிறர்க்கா — பிறர்க்கு உதவியாக
வாழ்ந்து விட்டேன்
இறுதிவரை பிறர்க்கு
உதவியாகவே வாழ்ந்திடுவேன்!
பிறர் உதவி இன்றியும்
பிறர்க்கு பாரமின்றியும்
என் முடிவு அமைய வேண்டும்!
மறைவிலும் உதவ வேண்டும்!
இதற்கும் வழி செய்து விட்டேன்!
1981 ல்லேயே கண் தானம்
செய்து விட்டேன்!
மறைந்த பின்- என் உடலை
வீணாக எரிப்பதையோ
புதைப்பதையோ விரும்பவில்லை!
மருந்துவம் பயிலும்
மாணவ- மாணவியர்கள்
ஆய்வுக்கு பயன் படுத்திக் கொள்ள
உடல் தானம் செய்து விட்டேன்!
ஒருவர் மறைந்த ஆறு மணி
நேரத்துக்குள்ளே கண் தானம்
செய்தவர் கண்களை அகற்றி
பாதுகாக்க வேண்டும்!
அப்படி செய்தால் தான்
தானம் செய்ததின் பலன்
பிறர்க்கு கிட்டும்!

உடல் தானமும் சேர்த்து நான்
செய்திருப்ப தாலே
நான் இறந்த உடன்— உடனே
தானம் பெற்ற ஆய்வு மையத்திற்கு
செய்தியை உடன் இருப்போா
சொல்ல வேண்டும்! இந்த ஓர்
பணியை மட்டும் தான் பிறரிடம் விட்டு
எனக்காக செய்யும் உதவியாய்
கோரி நான் யாசகம் பெற்றுள்ளேன்
ஆய்வு மையத்தார் ஊர்தி கொண்டு
வந்து உடலை கொண்டு போய் விடுவார்கள்!
மறு நாள் பத்திரிக்கையில்— என்
மறைவு செய்தி வரும்! அதில்
குறிப்பு என்று போட்டு — கே டி. எஸ்.
விருப்பப்படி கண்தானம் — உடல்தானம்
செய்யப்பட்டு விட்டது! எனவே
அவர் உடலைத்தேடி — காண
எவரும் வரும் தேவை யை அவர்
எவருக்கும் வைக்கவில்லை!
அவரவா — அவரவர் பணியை
அவர் மறைவால் நிறுத்த தேவை இல்லை
அவரை விரும்பி ஏற்போரும்
அவர் மீது எக்காரணத்தாலோ
வெறுப்புற்றிருப்போரும் அவர் மறைவு
செய்தி அறிந்து ஓர் வினாடி
அவரைப் பற்றி நினைத்தாலே போதும்
அவருக்கு இரங்கல் தெரிவித்தாகிவிடும்!
என்று விளம்பரத்திலேயே இருக்கும்!
செய்தி படித்தப்பின் அவரவர்
விருப்பம் போல் ஆவன செய்யலாம்!
என் மகனென ஏற்ற செலவனிடம்
என் விருப்பத்தை கூறி — அவன்
இனைந்திருக்கும் அரிமா சங்கம்
மூலமும் — அதில் பங்கேற்றுள்ள டாக்டர்கள்
இடமும் கூறி உடல் தானத்தை
ஏற்க ஆவன செய்யக் கேட்டேன்!
அரைமனதோடு முயற்சிப்பதாய்
கூறினார்கள்! முயற்சித்தார்களா?
தெரியாது! என் உயிர் காத்த
என் உள்ளத்தில் பெரும் மதிப்பை பெற்றுள்ள
டாக்டர் இடமே — இணை பிரியா — என்

இரண்டு நண்பர்களுடன் சென்று
உடல் தானம் செய்ய உதவிக் கேட்டேன்!
என் திட்டத்தை எற்றுக் கொண்டார்!
கால அவகாசம் கொஞ்சம் வேண்டு மென்றார்!
சரி ஆவன செய்யுங்கள் டாக்டர் என
கூறி வந்து விட்டேன் நண்பர்களுடன்!
அனைவரும் எனக்கு உதவுபவர்களே! ஆனால்
என் திட்டம் ஜூலை 30க்குள் 'உடல் தானம்''
செய்த பணி முடிய வேண்டும்! என் பிறந்த நாள்
செய்தியாக ஊருக்கு சொல்ல வேண்டும்!
என்பதாகும்! எனவே நானே நேரடியாக
பொது நிறுவனங்கள் — புகழ் பெற்ற வார
பத்திரிக்கைகள் — அரிமா சங்கங்கள் — அதனுடன்
இணைந்த பொதுத் தொண்டு நிறுவனங்கள்
பொது மருத்துவ மனைகள் — தனியார் மருத்துவ
பல்கலை கழகங்கள் — வேலூர் சி எம் சி மருத்துவ
ஆய்வு கூடங்கள் என்று பலப்பல வற்றிற்கு
தினம் தினம் எழுதிக் கொண்டே இருந்தேன்!
ஓர் பெரிய கடித கோப்பே உருவாகியுள்ளது!
என் முயற்ச்சி வீண் போக வில்லை!
மூன்று இடங்களில் இருந்து
ஒப்புதல் கடிதங்கள் வந்துள்ளது!
அதில் ஒன்றை தேர்ந்தெடுத்தேன்!
அவர்கள் கேட்டபடி — ஆவணம்
தயார் செய்து — உரியவர்களிடம்
ஒப்புதல் கையெப்பம் பெற்று
என் ஆடிடர் — வக்கில் — கணக்குள்ள
பேங் மேலாளர் — 25 ஆண்டாக
என் குடும்பத்தில் ஏற்பட்ட
நல்லது — கெட்டது எதிலும் ஈடுபாடு கொண்ட
மக்களை ஒத்த — பணியாற்றும் தோழர்
ஆகியோர் சாட்சியாக கையொப்பம் பெற்று
ஆவணத்தை நானே என் கைபட எழுதி
ஆராச்சி மையத்திற்கு '' உடல் தானம் ''
ஆவணத்தை அனுப்பி விட்டேன்!
என் உயிர் போன உடன் — உடலை
எடுத்து செல்ல ஆய்வு மையத்திற்கு
உடனே செய்தி சொல்லுபவர் இருவரை
நியமனம் செய்து — அவர்கள்
அப்பணியை நிறைவு செய்ய ஒப்பும்
அபிடவிட்டும் அவர்களிடம் வாங்கி

ஆவணத்துடன் இணைத்தும் விட்டேன்!
என் பணியை முடித்து விட்டேன்
என் உடலை எடுத்து செல்லும் பணி
ஆய்வு மய்யம் செய்ய வேண்டும்!
அந்த காலத்தை எதிர்பார்த்து
காத்திருக்கின்றேன் அன்பர்களே!
தானம் செய்த உடல்
தடங்கல் இன்றி போவதற்கு
நீங்களெல்லாம் ஒத்துழைக்க
வேண்டுமென்று கேட்பதுவே
என் பிறந்த நாள் செய்தியாகும்
அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும் பசி எவர்க்கு மாற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்த்து
வாழும் செழிமை மிக்க
மக்களாக — தமிழர் — தமிழ் உணர்வோடு
ஐயா — அண்ணா கொள்கைகள்
வெற்றி பெற உழைக்கும் மக்களாக
திகழ்ந்திட வேண்டுமென்ற — என்
அவா நிறைவு பெற என் எஞ்சி
நாளை செலவிட்டு வாழ்வேன்!
எனக்காக நான் வாழ்ந்த தில்லை — என்
வாழ் நாளில் பெரும் பகுதியில்!
பிறர்க்காகவே என்னை
பெற்றெடுத்தாள் என் தாய்!
இறப்பிலும் தானம் செய்தே
என் உடல் போகும் பிறர்குதவ!
இது தானப்பா என் பிறந்த நாள் செய்தி!
இறுதியாக என் உடல் தானத்தை
ஏற்றுக் கொண்டு என்னை பாராட்டி
கடிதம் எழுதிய ஆராய்ச்சி மைய்ய முதல்வர்க்கும்
மருத்துவ ஆய்வு நிறுவனத்துக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
விளம்பரத்தை ஏற்று
வெளியிட்ட "காஞ்சி நாடு" க்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!

காஞ்சிபுரம்

வணக்கம்! அன்பன்
K T S மணி
முன்னாள் நகர மன்ற தலைவன்

# செய்திகள்

## பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களின் மணிவிழா

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் தென் ஆற்காடு மாவட்டப் புரவலர், பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் எம்,ஏ, பி. எச். டி. அவர்களின் மணிவிழா சென்ற 16—7—1993 அன்று காலை 10 மணி அளவில் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள இராமசந்திர புரத்தில் சிறப்பாக நடைபெற்றது. மணிவிழாவையொட்டி 15—7—93 அன்று ஓர் கவியரங்கும், உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. 16—7—93 அன்று டாக்டர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. மூத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. அவர்கள் டாக்டர் எம். ஜி. முத்துகுமாரசாமி, அமைச்சர் ரகுபதி, நீதியரசர் அரு. லட்சுமணன், முனைவர் அ. ஞானம், முனைவர் ஔவை நடராசன், முனைவர் நாகப்பன், திருமிகு எஸ். டி. காசிராசன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

பதிப்புச் சேம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1960-ல் இருந்து இவர் பதிப்பாசிரியராகி. பதிப்பித்த நூல்கள் கடந்த 30 ஆண்டுகளாக பல்வேறு பரிசுகளைப் பெற்று வருகின்றன. இவர் எழுதிய 'தாகூர்' ஏன்ற நூலுக்கு தமிழக அரசு முதற் பரிசு வழங்கி சிறப்பித்தது. இவர் பல அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார். இவர் அறிவுக் கொடைஞர் மட்டுமல்ல, பெருங்கொடைஞரும் ஆவார். மணிவாசகர் பதிப்பகம் எனும் பெயரில் பதிப்பகம் நடாத்துகிறார்.

தென்னாற்காடு மாவட்டத்தின் பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் புரவலரான இவர், பேரவையின் அறக்கட்டளைக்கு

ரூ. 5000 நிதி வழங்கியுள்ளார் திங்கள் தோறும் சிதம்பரத்தில் இரண்டாவது ஞாயிறு அறிஞர் அண்ணா பற்றிய ஆய்வுச் சொற் பொழிவுகள் நடத்தி வருகிறார். இதுவரை பத்து பொழிவுகள் நடந் துள்ளன திராவிட இயக்க இதழ்கள், திராவிட இயக்க வேர்கள், தி மு க, வின் தமிழ்ப்பணி, திராவிட இயக்கமும் திரைப்படமும் தனித் தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம் ஆகிய நூல்களை சிறப்பாக வெளி யிட்டுள்ளார். 40-க்கும் மேற்பட்ட பரிசுகள் பெற்றிருக்கிறார். பகுத் தறிவு சிற்றிலக்கியங்கள் தொகுத்துள்ளார். அவர் நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்கும், தமிழினத்துக்கும் இன்னும் பல பணிகளைச் செய்யவேண்டுமென பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை நெஞ் சார வாழ்த்துகிறது.

# பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை
## திருச்சிராப்பள்ளி மாவட்டம்
## தா. பழூர் ஒன்றிய நகரப் பொறுப்பாளர் பட்டியல்

1. எஸ். குழந்தைசாமி — ஒன்றிய அவைத்தலைவர்
2. கே. இளவரசன் — ஒன்றிய செயலாளர்
3. இராசேந்திரன் — ஒன்றிய பொருளாளர்
4. எஸ். கலியமூர்த்தி — ஒன்றிய துணைச் செயலாளர்
5. அருள் — ஒன்றிய துணைச் செயலாளர்
6. கே. பிச்சமுத்து — கூடுதல் ஒன்றிய துணைச்செயலாளர்
7. பீ. நாகராசன் — நகரச் செயலாளர்
8. எம். செல்வம் — நகர அவைத்தலைவர்
9. கே.ஜி.பாஸ்கர் — நகரப் பொருளாளர்
10. வி. திரவிய ராஜ் — நகரத் துணைச்செயலாளர்

## செயங்கொண்டம் உடையார் பாளையம் ஒன்றிய நகரப் பொறுப்பாளர்கள்

1. ரெ. சாமிதுரை — ஒன்றிய அவைத்தலைவர்
2. கே. பாஸ்கரன் — ஒன்றியப் பொருளாளர்
3. சு. ஆறுமுகம் — நகர அவைத்தலைவர்
4. த. கிருட்டிணமூர்த்தி — நகரச் செயலாளர்
5. ஆர். வெங்கட்ராமன் — நகரத் துணைச் செயலாளர்
6. எம். அய்யப்பன் — நகரப் பொருளாளர்
7. சு. தனசிங் — கூடுதல் நகர துணைச் செயலாளர்
8. டி. இராதாகிருட்டிணன் B.A. — மாவட்டத் துணைச் செயலாளர்

## செந்துறை ஒன்றியப் பொறுப்பாளர்கள்

ஏ. முருகேசன் ஒன்றியத் துணைச் செயலாளர்
பெ. சங்கர் ஒன்றியப் பொருளாளர்
க. வேல்முருகன் நகரத் துணைச் செயலர்
கே. விநாயகமூர்த்தி நகரப் பொருளாளர்
காசி, இராமலிங்கம் நகரத் துணை செயலாளர்
ஏ. முருகானந்தம் நகரக் கூடுதல் துணை செயலாளர்

## வேப்பூர் ஒன்றியப் பொறுப்பாளர்கள்

கவிஞர். சே.ஏ. முத்தரசன் B.A. மாவட்ட துணை செயலாளர்
வ. வெங்கிடாசலம் M.Com., ஒன்றிய செயலாளர்

## அரியலூர் வட்ட நிர்வாகிகள்

TAP பழநிசாமி B.Sc. B.L. மாவட்ட அவைத்தலைவர்
M. பாண்டுரங்கன் ஒன்றிய செயலாளர்
புலவர். பாலகுரு M.A. M.Ed., ஒன்றிய அவைத்தலைவர்

'காஞ்சி நாடு' வாழ்நாள் உறுப்பினர்

இரா. துரை—கவுந்தபாடி

'காஞ்சி நாடு' இதழ் வளர்ச்சிக்கு நிதி வழங்கியவர்கள்

திரு. K.T.S. மணி அவர்கள் காஞ்சீபுரம் ரூ 400/-
தா. அருணாசலம் —மாணவர் நகலகம் ரூ. 300/-
தமிழ் இலக்கியக் கழகம்—உத்திரமேரூர் ரூ. 150/-

பேரவை நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 14—திருச்சி மாவட்ட கலந்துரையாடல்—திருச்சி
ஆகஸ்ட் 15—அரியலூர் மாவட்ட கலந்துரையாடல்—அரியலூர்
ஆகஸ்ட் 16—மதுரை மாவட்ட கிளை தொடக்க விழா—மாலை 4 மணி இரவு 7 மணி
ஆகஸ்ட் 17— தஞ்சை மாவட்ட கலந்துரையாடல்—தஞ்சாவூர்

## நூல் நயம்

'மேதைகளின் மேடைப்பேச்சு' என்கிற தலைப்பில் உலக மேதைகளின் சீரிய சொற்பொழிவுகளைத் தொகுத்து ஓர் புத்தகமாகத் தந்திருப்பவர் நமது அருமை நண்பர் தோப்பூர் திருவேங்கிடம் எம். ஏ. அவர்கள். தோப்பூரார் என்றால் திராவிட இயக்கத்தில் யாவரும் அறிவர். 1971-ல் சட்டமன்ற உறுப்பினராகவும், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவராகவும், ஆம்பூர்கூட்டுறவு சர்க்கரை



217212 சென்னை-600 008

ஆலையின் தலைவராகவும் தேசிய சிறுசேமிப்புத் திட்டக்குழுவின் துணைத்தலைவராகவும், வட ஆற்காடு மாவட்டத்தில் தி.மு.க செயலாளராகவும் பணியாற்றியவர். இவரின் படைப்புகள் 'திராவிடன்' 'திராவிட நாடு', 'முரசொலி' 'நம்நாடு' ஆகிய ஏடுகளில் வெளிவந்துள்ளன. இவரே 'தென்புலம்' எனும் இதழை நடத்தியவர். நாடு வண் அரசு 1975-ல் அவசரச் சட்டம் என்ற பெயரில் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டபோது அதை எதிர்த்துப் பத்திரிகைச் சுதந்திரம் ஏன்? என்ற நூலை எழுதியதின் காரணமாக 'மிசா' கைதியாக ஓராண்டுக்காலம் சிறையில் இருந்தவர். தற்போது பேரறிஞர் அண்ணா இலக்சியப் பேரவையின் வட ஆற்காடு மாவட்ட அமைப்பாளர்.

இந்த நூலில் புகழ் பெற்ற தலைவர்களின் புகழ்பெற்ற பேச்சுக்களை தொகுத்து நமக்குத் தந்திருக்கிறார். அறிஞர் அண்ணா மார்டின் லூதர், வின்ஸ்டன் சர்ச்சில், ஆப்ரகாம் லிங்கம், சிசரோ, சாப்லின், நெப்போலியன், போன்ற பல காலத்து தலைவர்களின் அரிய அறிவுப் பேழையை நமக்குத் தொகுத்து அளித்துள்ளார் அறிஞர் அண்ணாவின் 'மேடைப்பேச்சு' என்கிற சொற்பொழிவையும் இதிலே தொகுத்துத் தந்திருக்கிறார்கள். இன்றைய இளைஞர்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயன் பேற வேண்டிய அரிய அறிவுப் பெட்டகம் இது சிரமப்பட்டுத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். இப்போது வந்திருப்பது மூன்றாம் பதிப்பு—இன்னும் பல பதிப்புகள் வரவேண்டும் அவருக்கு நமது பாராட்டுகள்.

# கட்சியைவிட்டு எவராவது பிரியநேரிட்டால் . . .



கட்சியைவிட்டு எவராவது பிரிய நேரிட்டால், உண்மையில் கூறுகிறேன்; வருத்தந்தான். கூடுமான வரையில் கூடிவாழ்வதையே நான் விருப்புகிறேன். சுவரிலிருந்து சிறு ஆணி பெயர்க்கப்பட்டாலும், ஆபத்தில்லை என்றாலும் பார்க்க நன்றாக இராது என்று நினைப்பவன் நான்.

'திராவிட நாடு' அறிஞர் அண்ணா—தம்பிக்கு 7-5-1955

நன்கொடை ரூ. 2-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி
நாடு

# மடல்கள்

அன்பு பரிமளம்,

வணக்கம். நலம். நலமறிய அவா. அண்ணாவின் தொகுப்பினை வெளியிடுவதற்கான அனைத்துப் பணிகளிலும் என்னை நானே முழு அளவில் ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். அதை மிகவும் பெருமையாகவும், என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மாபெரும் பேறாகவும் கருதுகின்றேன்.

நிற்க. 7—7—93 ''காஞ்சி நாடு'' மிகவும் மெருகேறியிருப்பது கண்டு மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன், தங்களின் ''ஊரார் உரையாடல்'' அருமையாக அமைந்துள்ளது, நண்பர் A. K. மூர்த்தி அவர்களின் ''மேடைத்தமிழ்' ஒரு அற்புதப்படைப்பு—ஈடுஇணையற்ற ஆய்வு. அனைத்துக்கும் சேர்த்து. தங்களுக்கு எனது அன்புப் பாராட்டுக்கள்.

அன்பன்,

M. S. வெங்கடாசலம் M.A.B L.

ஆசிரியர் ,வெளியிடுபவர் : மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர். C. R. கண்ணன், அண்ணன் அச்சகம், செ[illegible]




பேசி : 8278570

பெறுநர் :

DIRECTOR
TAMILNADU ARCHIVES
MADRAS - 8.

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034